Registered as a News Paper in Ceylon P. M. G. No. H. A. 9/300 of 1953.

விரோதிஞு (1889) ஆவணிமீ 28உ ஆரம்பமானது.

# இந்து சாதனம்

சிவமயம்

வெள்ளிதோறும் வெளிவருவது | தனிப்பிரதி விலை: சதம் 10.

[புத்-எரு] யாழ்ப்பாணம்:- சோபகிருதுஞு சித்திரைமீ கூஉ வெள்ளிக்கிழமை (19 April. 1963) [இல-ந]

## மாயாவாத தும்சகோளரி நா. கதிரைவேற்பிள்ளை ஞாபகம்

[பண்டிதமணி திரு. சி. கணபதிப்பிள்ளை]

முற்றொடர்—4.

### மாயாவாதம்

பரபக்கம் சுவபக்கத்தாருக்குச் செய்வதொரு எச்சரிக்கை. விரிவிலா அறிவினர்கள் வேறொரு சமயம் எரிவினாற் செய்காராயினும், அது எம்பிராற்கு ஏற்றதாகும். அப்படிப்பட்ட சமயமும் திருவருளுக்குச் சம்மதமாம். திருவருள் எச்சமயத்தையும் சம்மதிப்பதாகிய நீதியை எந்தச் சமயம் நாடி உணருகின்றதோ அந்தச் சமயம் மற்றைச் சமயத்தோடு முரண்பாடுறுத மெய்ச்சமயமாம். திருவருள் நீதியை உணராத சமயம் மெய்ச் சமயத்துக்குப் புறம்பான சமயம். அது மற்றைச் சமயங்களோடு முரண்படுஞ் சமயம்.

மெய்ச்சமயத்துக்கு அடிப்படை, வேதத்தின் ஞான காண்டமாகிய வேதாந்தம். வேதாந்தத்திற்கு அடிப்படை ஞான நிமித்தமாகிய கன்மகாண்டம். வேதாந்த அடிப்படையில் எழுந்த மெய்ச்சமயம் ஆறுவகைப்படும். ஒவ்வொரு வகையிலும் பல்வேறு துறைகள் உண்டு. அறுவகை மெய்ச் சமயத்தில் ஒன்று சைவம். அதிற் பலவேறு துறையுண்டு இத்துணையும் முற்கூறப்பட்டவையின் சுருக்கம்.

வேதாந்தம் சைவம் சைவத்துறைகள் பெயரளவிலாயினும் வழங்குபவைகள். இவைகள் அக்கினியாற்றைக் கடப்பதற்கு இட்ட மயிர்ப்பாலம்போன்றவைகள். குருவின் பாதத்தைப் பற்றிக்கொண்டு செல்ல வேண்டியவைகள். சிறிது தவறின் அதோகதியாம். முரண்பாடுறுஞ் சமயங்களில் வீழ நேரும். ஒருவர் சிதம்பரம் போக வேண்டியவர். தவறுதலாக மற்றொரு புகையிரதத்தில் ஏறினார். அவர் திருவாதிரைத் திருமஞ்சனத்துக்குச் சிதம்பரம் போய்ச் சேருவார்தாமே! அவரையும் ஒரு திருவருள் நீதிதான் நடத்துகின்றது.

நரியின் காலென்று புங்கம்வேரைப் பற்றிக்கொண்டு, அதுதான் நரியின் காலென்று முதலைத்தாபித்ததுதை பிரசித்தமானது.

வேதாந்தம் சைவம் சைவத்துறையுள் ஒன்றென்று கொள்ளத்தக்க சிவாத்துவிதம் என்பன எல்லாம் இப்பொழுது முதலைக் கதைகளென்றே கருதத்தக்கவை. அவ்வளவுதூரம் அவைகள் உயர்ந்தபெயரை மாத்திரம் வைத்துக்கொண்டு பிறழ்ந்துபோயின. பிறழ்ச்சிகள் புறச்சமயத்திலும் மோசமானவைகள். வேதநூல், சைவநூல் என்பவைகளைத் திரித்துப் பொருளுரைப்பவைகள் அவைகள். வேதரிஷிகளின் குருபரம்பரை வற்றிப் போனபிறகு படிப்பாளிகள் பெரிய அக்கிரமஞ் செய்துவிட்டார்கள். தாம் கருதியவைகளையே உபநிடதம் முதலிய வாக்குக்கள் உணர்த்தியன என்று உரைகட்டிவிட்டார்கள். மூலத்திலும் பார்க்க உரைக்குப் பிற்காலத்தில் மதிப்பு எழுந்துவிட்டது.

பிரமசூத்திரம் வியாசர் செய்தது. அதற்கு சங்கரர் செய்த உரையை, நூலாசிரியராகிய வியாசர் ஒப்புக்கொள்ளாமல் ஆட்சேபித்தாராம். சங்கரர் வியாசருடன் வாதஞ்செய்து வெற்றியெய்தினராம். இது சங்கரர் விஜயம் செப்புங் கதை. இக்கதையிலிருந்து மூலத்தைச் சாட்டுக்கு

(தொடர்ச்சி 2-ம் பக்கம்)

## நற் சிந்தனை

அனங்க னுகத்தை
யன்றெரி செய்தவன்
கணங்கொள் பேயோ
டாடிய கள்வனே

## சிவதொண்டன் ஊர்வலம்

—0—

இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்குச் சிவதொண்டன் நிலையத்திலிருந்து நல்லூர் வழியாகக் கொழும்புத் துறைக்குச் செல்வதாகிய ஒரு யாத்திரைவழிபாடுநடைபெறும்.

காலை சிவதொண்டன் நிலையத்தில் ஆச்சிரமவாழ்வு நடைபெற்று மாலை 3மணிக்கு மங்கலகீத வாத்தியங்களோடு ஊர்வலம் புறப்படும்.

## பிரதோசமூர்த்தி பிரதிட்டை

திருக்குறிப்புத் தொண்டர் சபையினர், பிரதோஷமூர்த்தியை நகுலேஸ்வரம் சிவன் கோவிலிலிருந்து எதிர்வரும் புதன்கிழமை மாலை 4 மணியளவில் எழுந்தருளச் செய்து ஊர்வலமாக மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில், தெல்லிப்பளை, மல்லாகம், மருதனார்மடம், கோப்பாய், கைதடி, தச்சன்தோப்பு, தனங்கிளப்பு, பூநகரிப்பாதையாய் இம்மாதம் 15-ம் நாள் (28 - 4 - 63) ஞாயிற்றுக்கிழமை மாலை 7 மணியளவில் திருக்கேதீச்சரம் சேர்ந்து திங்கள் உதய நேரத்திற்குப் பிரதிஷ்டை செய்வதற்குத் திருவருளை முன்னிட்டு எண்ணியிருக்கின்றனர்.

—

உ

நன்றுடையானைத் தீயதில்லானை நரைவெள்ளே
றொன்றுடையானை உமையொருபாக முடையானைச்
சென்றடையாத திருவுடையானைச் சிராப்பள்ளிக்
குன்றுடையானைக் கூறவென்னுள்ளம் குளிருமே.

x x x

நன்மைபெருகு அருள்நெறியே வந்தணைந்து நல்லூரில்
மன்னுதிருத் தொண்டனார் வணங்கி மகிழ்ந்தெழும்பொழுதில்
உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றோம் என்றவர்தஞ்
சென்னிமிசைப் பாதமலர் சூட்டினான் சிவபெருமான்.

## அலை கடலில் அரி ஏறு

★

"அளவையூர் - சஞ்சீவி"

இராகம் : அரிகாம்போதி : தாளம் : ஆதி

பல்லவி

அப்பா திருநாவுக் கரசே போற்றி
அருந்திரு மறைதந்த ஐயா போற்றி (அ)

அனுபல்லவி

இப்பாரில் மும்மல இருள்கெட வந்தாய்
இறைவ னிணையடித்தேன் இனிது சுரந்தாய் (அ)

சரணம்

திலகவ தித்தமக்கை செய்தவப் பேறே
திருவதி கைப்பரமன் திருவரு ளாறே
அலைகடற் கற்றோணி அமரரி யேறே
அன்பு கனிந்தசுவை அரும்பழச் சாறே (அ)

## கால்நடைகளைப் பேணுங்கள்

காரைநகர் வடக்கிலுள்ள கோவளம் என்னும் கிராமத்திலுள்ள மூடிக்குரிய நிலங்களைச் சிலர் முட்கம்பி வேலியிட்டு அடைத்தமையினால் மாடாடுகள் பசிதீரமேயப் புல்லில்லாமலும் குடிக்கத் தண்ணீரில்லாமலும் கஷ்டப்படுகின்றனவென ஒரு அன்பர் கொழும்புத் தினசரிப் பத்திரிகையொன்றுக்கனுப்பிய உருக்கமான செய்தி மூலமறிகின்றோம். குறித்த நிலங்கள் மாடாடுகள் மேய்வதற்கு நெடுங்காலம் பாவிக்கப்பட்டு வந்தனவாம். குடிக்க நல்ல தண்ணீர் கிடையாமையினால் பசுக்கள் கடல் தண்ணீரை நோக்கிச் செல்கின்றனவாம்.

இக்குறைகளை நீக்கி மாடாடுகள் வழமை போலப் புல்மேய்ந்து தண்ணீர் குடிக்கக்கூடிய வசதிகளையும் காரைநகர்க் கிராமச் சங்கம், அவ்வூர் டி. ஆர். ஓ. முதலியவர்களுடைய உதவியைப் பெற்றுச் செய்து வைக்க முன்வர வேண்டும்.

மாடாடுகளுக்கு இவ்விதமாகக் கஷ்டங்கள் வடமாகாணத்திலுள்ள மற்றைக் கிராமங்களிலும் நேரக்கூடும். அங்ஙனம் நேரிடின் அவ்வக் கிராமத்துக்குரிய கிராமச்சங்கம் கிராம முன்னேற்றச்சங்கம் போன்றவைகள் அக்குறைகளை நீக்கி மாடாடுகளைப் பேண வழிதேட வேண்டும்.

நாட்டின் செய்வம் மாடாடுகளைப் பேணுவதிற் தங்கியுள்ளது. ஒவ்வொரு கிராமத்திலும் மாடாடுகள் மேய்வதற்கு மேய்ச்சல் நிலங்கள் ஒதுக்கப்பெற்றிருத்தல் பெரும் தருமமாகும். நம்முன்னோர்கள் ஆவுரிஞ்சிக்கல், குளங்கள் ஆக்கினமை இவைகளைப் பேணுதற்கல்லவா!

சமயப்பிரசார அமைச்சர்,
சைவபரிபாலன சபை.

## அம்பாள் ஊர்வலம்

—0—

எதிர்வரும் 22-4-63 திங்கட்கிழமை நாயன்மார்கட்டு ஸ்ரீ இராச இராசேஸ்வரி பேச்சிஅம்பாளுக்கு பகல் அபிஷேகமும், இரவு8மணியளவில் அலங்கரிக்கப்பெற்ற "சிங்கவாகனத்தில் விசேட மேளவாத்தியங்களுடன் வீதி ஊர்வலமும் நடைபெறும். ஊர்வலம் ஆனந்தன்வடலிவீதி, திருமகள்வீதி, கனகரத்தினம் வீதி, செம்மணிவீதி, அம்பாள்வீதி வழியாக வந்து தேவஸ்தானத்தை அடையும். விசேட மேளக்கச்சேரியும் ஏற்பாடாகியுள்ளது.

—

## நாவலரைக் காப்பாற்றிய சிவசின்னங்கள்

—0—

10-4-1963 புதன்கிழமை நல்லூர் தெற்கு ஸ்ரீ கற்பக விநாயகராலயத்தில் நிறைவேறிய இலவச தீட்சையைப் பிரம்மஸ்ரீ இ ஞானசேகரக் குருக்களவர்கள் ஆரம்பித்து வைத்துச் சொற்பொழிவாற்றுகையில் இன்றுதான் சைவ சமயப்பிரவேசம் செய்யப்படுகின்றதெனவும், சமயதீட்சை பெற்றவர்கள் எப்பொழுதும் குரு, லிங்கம், சங்கமம் ஆகிய மூவகைக் கருமங்களையும் நிறைவேற்ற வேண்டுமெனவும், ஆலயதரிசனம் செய்வோர் மும்முறை ஆலயங்களை வலம்வந்தே தரிசனம் செய்வது முறையாகுமெனவும் இன்னும் பல அறிவுரைகளையும் அங்கு தீட்சைபெற்றவர்களுக்கு எடுத்துரைத்தார்.

கௌரவ செயலாளர் திரு. த. இராசரத்தினம் சொற்பெருக்காற்றுகையில் 'தீட்சை' சமயகுரவர்களால் எம்மைப் புனிதமாக்கிக் கடவுட் தன்மையடைய வழி வகுக்க வந்த மார்க்கமென்றும் தீட்சை பெற்றவர்கள் சிவசின்னங்களை அணிந்து தம்மைத்தாமே காப்பாற்றிக் கொள்கின்ற தன்மையை அடைகின்றனரெனவும், எவ்வித தீய சக்தியும் ஒன்றுமே செய்து விட முடியாதெனவும் கூறினார். இதற்கு உதாரணமாக ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சமயசம்பந்தமான கண்டனங்களை உடனுக்குடன் நிகழ்த்தியமையால் அவர்மேற் கோபங்கொண்ட பகைவர்கள் தீயவர்கள் சிலரை ஏவி அப்பெரியாரை ஒழித்துவிடத் திட்டமிட்டிருந்த பொழுது நாவலர்பிரான் வீதியால் வித்தியானுபாலன இயந்திர சாலையிலிருந்து தமதில்லம் ஏகும்காலை அன்னாரின் சிவசின்னங்களைக்கண்டு அஞ்சி திட்டமிட்டுவந்த தீயவர்கள்

(தொடர்ச்சி 2ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம்
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லா மரனுமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

சோபகிருது ஹு சித்திரை மீ
கூ உ வெள்ளிக்கிழமை

## பயிர் செய்து பசி தீர்ப்போம்

—:—

அடியார்களுக்கு சிவதொண்டன் நிலயத்திலிருந்து வெளிவந்த அழைப்பிலே கூட்டுவழிபாட்டு யாத்திரை நடத்துவதைப் பற்றிக்கூறப்பெற்றதுடன் வாழ்க்கைக்குரிய ஆக்க நெறியில் நிற்கும் முறை எடுத்துக் காட்டப்பெற்றிருக்கின்றது. திருவருட் பொலிவின் செம்மையை இது தெளிவுறச் செய்கின்றது. தவப் பெருங்குருவின் தலைமையிலே தமிழகம் இயங்குமேயானல் அல்லல் போம் அமைதி உண்டாகும் என்பதே எங்கள் கருத்து. வாழ்க்கை வழியை வள்ளுவனர் வகுத்து மக்களின் ஆன்ம ஈடேற்றத்துக்கு நெறிகாட்டியது போலத் தவப்பெருங்குருவின் நற்சிந்தனைகள் உலகம் உய்வதற்குரிய உறுதி மொழிகளாகும்.

உழுதுண்டு வாழ்வதே உகந்த நெறியென்றுரைத்த வள்ளுவனர் ஏனைய பணிகள் பழுதுள்ளனவென்று எச்சரிக்கை செய்தமையை நோக்கும் பொழுது சிவதொண்டன் நிலயத்தார் காட்டும் வாழ்க்கைவழி மக்கள் பண்பாட்டுக்குரியதென்பது நன்கு புலப்படும். பழுதுள்ள பணிகளில் இளைஞர்கள் ஈடுபடுவதால் நாடு சீர்கேடடையும் என்பதையும் நாம் அனைவரும் ஞாபகத்தில் வைத்துக் கொள்வது நல்லது முயற்சி திருவினையாக்கும் என்றால் அம்முயற்சி செம்மையாய் அமைதல் வேண்டும். வாழ்வதற்கு உணவு வேண்டும், உணவு பெறுவதற்கு உழைப்பு வேண்டும். அவ்வுழைப்புப் பிழையில்லாதமைதல் வேண்டும் ஆகவே உழவின்பெருமையும் இன்றியமையாமையும் விளங்கும்.

பயிர் செய்கிறவன் பரமேசுவரனின் திருவருளை முன்னிட்டுப் பணியாற்றுபவன். வானம் பொய்யாதிருக்க ஈசனை வழிபட்டவண்ணமாயிருப்பவன் மாரிவளம் பெருக ஏரின் வளமும் பெருகி, நெல்லும் காய் கனி கிழங்கு வகைகளும் எல்லாம் பெறுபவன் சிறப்பொடு பூசனை செய்யவும், தானம் தவம் இரண்டும் வியனுலகிலே தங்கவும் தென்புலத்தார் - தெய்வம் விருந்து ஒக்கல் தான் என்றுங்கைம்புலத்தாறு ஓம்பவும் நெறிகாண்பவன், இப்பெருந் தரும கைங்கரியத்தை ஆற்றுவோரே அறநெறி நின்று நாட்டையும் மக்களையும் நல்ல வழியிற் செல்லப் பணிபுரிபவராவர்.

ஆக்கவழிகாட்டி மக்களை ஊக்குவிக்கும் இந்தஉணவு விருத்தி இயக்கத்தின் நோக்கம் மக்களை வாழ்வாங்கு வாழ வைப்பதே. அரசியலில் ஈடுபட்டுப் பாராளுமன்றத்தில் வாதாடி விட்டாற் பொருள் வளமும் உரிமைகளும் கிடைக்கும் என்று எண்ணிச் செய்ய வேண்டிய சேவைத் தொண்டாற்றுதிருந்தாற் பயன்பெறலாமா?

உழவுக்கும் தொழிலுக்கும் உரியவர்களாக நாம் அனைவரும் உழைப்பதே தேசசேவை. திருமுறைகளையும் திருத்தொண்டர்களையும் வள்ளுவர் வாக்கையும் நாவலர் நன்மொழியையும் போற்றிப் பழம் பெருமைபேசி உளம் மகிழும் நாம் அப்பழம்பண்புக்குரிய பணிகளை மறப்பது பொருந்தாது. பயிர்செய்து பண்புடன் வாழப் பழகுவோமாக.

———

திருவதிகை - மனவாசகங்கடந்தார்
அருளிச் செய்த

# உண்மை விளக்கம்

மூலமும் உரையும்

————

[சித்தாந்த பண்டிதர், சைவப்புலவர் இ. செல்லத்துரை]

(முற்றொடர் - 14)

### 6. I. நாதன் நடம் II. ஐந்தெழுத்து:

#### மாணவகன் வினு

நற்றவத்தோர் தாங்காண நாதாந்தத் தஞ்செழுத்தால்
உற்றுருவாய் நின்றாடல் உள்ளபடி — பெற்றிடநான்
விண்ணார் பொழில்வெண்ணெய் மெய்கண்ட நாதனே
தண்ணா ரருளாலே சாற்று. 30

கொ—கூ: விண்ஆர் பொழில் வெண்ணெய் மெய்கண்ட நாதனே, நல் தவத்தோர் தாம் காண நாத அந்தத்து அஞ்சு எழுத்தால் உருவாய் உற்று நின்று ஆடல் நான் உள்ளபடி பெற்றிட, (நீ உனது) தண் ஆர் அருளாலே சாற்று.

ப—ரை; விண் ஆர் பொழில் வெண்ணெய் மெய்கண்ட நாதனே - ஆகாயத்தை அளாவும்படி வளர்ந்த சோலைகளால் சூழப்பெற்ற திருவெண்ணெய் நல்லூரில் எழுந்தருளி யிருக்கின்ற மெய்கண்ட தேவரே, நல் தவத்தோர் தாம் காண - புன்னைத் தவ விசேட முடைய நல்லான்மாக்கள் தரிசிக்கும்படி, நாத அந்தத்து அஞ்சு எழுத்தால் உருவாய் உற்று நின்று ஆடல் - நாதத்தின் முடிவிலே இறைவன் திருவைந்தெழுத்தே திருமேனியாகக் கொண்டு நின்று திருநடனம் செய்யும் முறைமையை, நான் உள்ளபடி பெற்றிட - அடியேன் உண்மையாகத் தரிசிக்கும்படி, தண் ஆர் அருளாலே சாற்று - நீ உனது குளிர்ந்த கிருபையினாலே சொல்லி யருள்வாயாக.

பொழிப்பு: மெய்கண்ட நாதனே, (முன்னைத் தவ விசேட முடையோர் காணும்படி) நாதாந்தத்தில் இறைவன் திருவைந்தெழுத்தே திருமேனியாகக் கொண்டு திருநடனம் செய்யும் முறைமையை அடியேன் தரிசிக்கும்படி கூறியருளுவீராக.

#### பஞ்சாக்கரமும் திருநடனமும்

எட்டு மிரண்டு முருவான லிங்கத்தே
நட்டம் புதல்வா நவிலக்கேள் — சிட்டன்
சிவாயநம வென்னுந் திருவெழுத்தஞ் சாலே
அவாயமற நின்றாடு வான். 31.

கொ—கூ; புதல்வா, (சிட்டன்) நட்டம் நவிலக்கேள், சிட்டம் சிவாயநம என்னும் திரு எழுத்து அஞ்சாலே, எட்டும் இரண்டும் உரு ஆன இலிங்கத்தே அவாயம் அற நின்று ஆடுவான்.

ப—ரை: புதல்வா - மாணவகனே, நட்டம் நவிலக் கேள் - சிவபெருமானது திருநடனத்தைச் சொல்லுகிறோம் கேட்பாயாக; சிட்டன் - (அச்) சிவபெருமான் சிவாய நம என்னும் திரு எழுத்து அஞ்சாலே - சிகாரம் ஆதியாக

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

———

திருநாவுக்காசு நாயனர்

## குருபூசை

—()—

நாள்: சோபகிருது ஹு சித்திரை
எ ட (20 - 4 - 63)
சனிக்கிழமை.

இடம் : சைவ பரிபாலன சபை
நாவலர் ஆச்சிரம மண்டபம்

நிகழ்ச்சிகள்:

முற்பகல் 10 பிற்பகல் 1.
சிவபூஜாமண்டபத்தில் சிவபூசை.
நாவலர் மண்டபத்தில்
கடவுளாராதனை
புராணபடனம்
பெரியபுராணம்
திருநாவுக்கரசு நாயனர் புராணம்
திருவடி சேர்தல்.
மாகேசுரபூசை.

இரவு விரிவுரைக் கூட்டம்
இரவு 7 மணி ஆரம்பம்
திருநாவுக்கரசுநாயனர்
வாழ்க்கைச் சித்திரம்
தமிழ்ப்பண்டிதர், பிரம்மஸ்ரீ.
வ. மு. இரத்தினேஸ்வர ஐயர்
அவர்கள்
திருநாவுக்கரசர் அருள்வாக்கு
சைவப்பிரசாரகர்
திரு வே. கந்தையா அவர்கள்
தமிழ்மறையோதல்
ஸ்ரீமத். தி. கலியாணசுந்தரக்
குருக்கள் அவர்கள்

சைவாபிமானிகள் யாவரும்
சமுகமளிப்பார்களாக

மு. மயில்வாகனம்
[illegible]
சைவபரிபாலனசபை
யாழ்ப்பாணம். 16-4-63.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாயாவாத துச்சகோளரி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வைத்துக் கொண்டு உரைகள் எவ்வளவுதூரம் விலகி நடந்திருக்கின்றன என்பது தெளிவாகும். வியபிசாரப் பெண்ணொருத்தி பிரசவிக்கும் பிள்ளைகளை யெல்லாம் கணவன் என்றிருப்பவன் சட்டப்படி தன் பேரிற் பதிவு செய்து கொள்ள வேண்டியவனாகின்றான். இவ்வாறாகிய ஒருநிலை உபநிடதம், பிரமசூத்திரம் முதலிய மூல நூல்களுக்கு உரைகாரர்காலத்தில் நேர்ந்து விட்டது. இதனை வேதம்பற்றி தாம் எழுதிய நூலில் மகான், அரவிந்தர் எடுத்துக் காட்டி இரங்குகின்றார். அதுநிற்க,

சந்தானகுரவர்களுள் ஒருவராகிய உமாபதிசிவாசாரியர், மூலநூல்களைச் சாட்டுக்கு வைத்துக்கொண்டு பிறழ்ந்த கருத்துக்களைக் கொண்டனவாய் உயர்ந்த பெயர்களால் வழங்குகின்ற வேதாந்தப்பிறழ்வு, சைவப்பிறழ்வு ஆகிய பிறழ்வுகளை எடுத்துக்காட்டி, எச்சரிக்கை செய்யும்முகமாக ஒருநூல் செய்திருக்கின்றார் அந்நூல் சங்கற்ப நிராகரணம். அது சிவப்பிரகாச நூல் படித்தற்குரியவர்களுக்குப் புங்கம்வேரை நரியின் காலென்று பற்றாமல் செய்த எச்சரிக்கை.

சங்கற்ப நிராகரணம் ஒன்பது மதங்களைத் தனித்தனி சங்கற்பித்து நிராகரிக்கின்றது. ஒன்பது மதங்களில் ஒன்று வேதாந்தப்பிறழ்வு ஏனைய எட்டு மதங்களும் சைவப்பிறழ்வுகள்.

வேதாந்தப் பிறழ்வுக்கு மாயாவாதம் என்ற பெயர் கொடுக்கப்பட் டிருக்கிறது. மாயாவாதக் கொள்கைகளுக்கு, உயர்ந்ததாகிய வேதாந்தம் என்ற பெயரை வழங்குவதை உமாபதி சிவாசாரியர் ஒப்புக் கொள்ளவில்லை. ஏனைய சைவப்பிறழ்வுகள் எட்டும் ஐக்கியவாத சைவம், பாடாணவாதம், பேதவாதம், சிவசமவாதம், சிவசங்கிராந்தவாதம், ஈசுவர அவிகாரவாதம், நிமித்தகாரண பரிணமவாதம், சுத்த சைவம் என்பனவாம். இவற்றைச் சைவசித்தாந்தப் பிறழ்வுகள் என்று கூறுவாருமுளர்.

பிற்காலத்தில் மாயாவாதம் வேதாந்தம் ஆயிற்று. அவ்வாறே சைவப்பிறழ்வுகளும் உயர்ந்த ஸ்தானத்தைப் பெறுவன ஆயின. சைவப்பிறழ்வுகள் எட்டில் இடைக்கணின்ற ஆறும் பிற்காலத்தில் அகச்சமயங்கள் ஆயின, இது பெரிய அநியாயம். முதற்கணின்ற ஐக்கியவாதம் அகப்புறச் சமயமாயிற்று. இறுதிக்கணின்ற சுத்த சைவம் எங்கே சேருவதென்று சங்கடப்படுகின்றது. இவையெல்லாம் உரைகாரர் கட்டி நடத்துபவை. சிவாத்துவிதம் என்பது சைவத்துறைகளுள் ஒன்று என்று கருதத்தககது. அதன் பிறழ்வு நிமிததகாரண பரிணமவாதம். பிற்காலத்தில் மாயாவாதம் வேதாந்தம் ஆனுற்போல் நிமித்தகாரண பரிணமவாதம் அருமந்த சிவாத்துவிதம் ஆயிற்று. இது மற்றொரு அநியாயம்.

சங்கற்ப நிராகரணத்தில் வரும் ஒன்பது மதத்திலும் மயாவாதம் வேதாந்தப் பிறழ்வு மற்றைய எட்டும் சைவப்பிறழ்வு எட்டில் ஒன்றாகிய நிமித்தகாரண பரிணமவாதம் சைவத்துறையுள் ஒன்றாகிய சிவாத்துவிதப் பிறழ்வு சைவத்துறைப் பிறழ்வும் சைவப்பிறழ்வே.

உமாபதி சிவாசாரியார் சைவப்பிறழ்வு கூற, அப்பிறழ்வுகளில இடை நின்ற ஆறினை அகச்சமயம் என்றும் நிமித்தகாரண பரிணமவாதத்தைச் சிவாத்துவிதம் என்றும் கூறுவது உரைக்கோளாறு. இக்கோளாற்றினைப் பிற்காலச் சைவ சித்தாந்திகளென்றிருப்பவர்கள் ஏற்றுக் கொள்வதற்கும் மாயாவாதத்தை வேதாந்தம் என்று கொள்வதற்கும் பேதமில்லை. சைவப்பிறழ்வுகளில் இடைக்கண் நின்ற ஆறினையும் அகச்சமயம என்பதும் அவற்றுளொன்றைச் சிவாத்துவிதம் என்பதும் நூலாசிரியர் கருத்தாகா.

சங்கற்ப நிராகரணத்தில் முதற்கண் எடுத்து நிராகரிக்கப்பட்டது வேதாந்தப் பிறழ்வாகிய மாயாவாதம். அடுத்து நிராகரிக்கப்பட்டவை எண்வகைச் சைவப் பிறழ்வுகள். அப்பிறழ்வுகளின் வரலாறு அநுமானின் வால்போல் வெகு நீளமானது. நீளமாயினும் சைவசமய பாடபுத்தகம் எழுதுவோர், சைவபாடத் திட்டம் அமைப்போர், சைவப்பிறழ்வுகளின் வரலாற்றை ஆவசியகம் அறிந்தே தீரவேண்டும். இங்கே அதனை விரிப்பதற்குச் சந்தர்ப்பம் இல்லை. எடுத்துக்கொண்ட மாயாவாதம்பற்றிச்சிந்திப்போம்.

—தொடரும்.

## நாவலரைக் ... ... ...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

அவரை அணுகி அட்டாங்க நமஸ்காரம் செய்து நடந்ததை ஆதியோடந்தமாகக் கூறினர்கள்; நாவலர்பிரான் அவர்களை வாழ்த்தினர் எனக் கூறினர். தொடர்ந்து பேசுகையில் தீட்சைபெற்றவர்களணியும் சிவசின்னங்கள் யாவும் பல ஆயுதங்களாகக் கருதப்படும். ஆகவேதான் தீட்சைபெறுதல் அவசியமெனப் பெரியோர் வழிகாட்டி யிருக்கின்றனரெனவும் எதிர்காலத்தில் தீட்சையை ஒவ்வொருவரும் பெற்று நனமையடையப் பிரயத்தனப்பட வேண்டுமெனவும் வேண்டிக் கொண்டு இலவச தீட்சைப் புத்தகங்களை வழங்கி மேற்படி இலவச தீட்சையை நிறைவேற்றி வைத்த பிரம்மஸ்ரீ ஞானசேகரக் குருக்களவர்களுக்கு நன்றி கூறினர்.

—:—

# தமிழ்ப் பகுதிச் செய்திகளுக்குத் தக்க இடம்

## ஆங்கிலப் பத்திரிகைகளுக்கு வேண்டுகோள்

ஞாயிற்றுக்கிழமை 7-4-63 அன்று வட இலங்கை சம்ஸ்கிருத சங்கத்தின் ஆதரவில் வண்ணை நாவலர் வித்தியாசாலையில் வால்மீகி விழா கொண்டாடப்பெற்றது. சங்கத்தலைவர் வியாகரண சிரோமணி தி. கி. சீதாராம சாஸ்திரிகள் தலைமைவகித்தார். இராமநாதன் கல்லூரி மாணவிகள் சம்ஸ்கிருதத்தில்தோத்திரப் பாடல்கள் விழாத் தொடக்கத்திலும் முடிவிலும் பாடினார்கள்.

தலைவர் முன்னுரையின் பின் பேராசிரியர் எஸ் ஆர். துரைஸ்வாமி சாஸ்திரிகள் (முன்னாள் சென்னை மாநிலக் கல்லூரியிலும் அண்மையில் இலங்கை வித்தியாலங்காரப் பல்கலைக்கழகத்திலும் பேராசிரியராகப் பணியாற்றியவர்) சம்ஸ்கிருதத்திற் பேசும்பொழுது அம்மொழியின் சிறப்பை எடுத்துக் காட்டி எல்லோரும் அதனை விரும்பிப் பயிலவேண்டுமென்றும் ஒருவர் பல மொழிகளைக் கற்பதனால் நிறைந்த அறிவைப் பெறலாமென்றும் தாம் மலையாளமொழியிற் பேசுபவராயிருந்தபோதிலும் கன்னடம் முதலிய பன்மொழிகளைக் கற்று அவற்றிற் பேசக்கூடியதாக இருப்பதையும் உதாரணத்துடன் எடுத்துரைத்தார்.

பின்பு ஆதிகாவியமாம் இராமாயணத்தின் சுந்தர காண்டத்தின் சிறப்பினைத் தமிழில் விரித்துரைக்கும்போது அன்னார் கூறியதாவது:

'இராமாயணம்' என்பதற்கு இராமனின் வரலாறு என்று கொள்வதை விடச் சீதையின் வரலாறு என்று சொல்வதே சிறப்பானது (ராமா = சீதை) இராமனுடைய உயர்வுக்கெல்லாம் சீதை முககிய காரணமாவாள். இராம பக்தனும் அனுமான் பல இன்னல்களையெல்லாம் ஊடறுத்து இலங்கையுள் நுழைந்து சீதாதேவியிடம் இராமனின் கணையாழியைக் கொடுத்துச் சூடாமணியைப் பெற்று மீண்டு இராமனிடம் சமர்ப்பித்ததன் மூலமாக எளிதில் துன்பங்களை விலக்கியவன் —'சுந்தரன்' (சுஷ்டு தாரயதி இதி சுந்தரஃ) என்ற பெயரைப் பெறுகிறான்.

நிறைவேறாத காரியங்களை நிறைவேற்றும் பெருமை இக்காண்டத்துக்குண்டு என்னும் நம்பிக்கையால்தான் இந்நாளிலும் சுந்தர காண்ட பாராயணம் செய்பவர் பலர் இருக்கின்றனர்.

தலைவர் தமதுபின்னுரையில் வால்மீகி இராமாயணம் சிறந்த தர்மத்துக்கும் நீதிக்கும் இருப்பிடம் என்பதை உதாரணத்துடன் எடுத்துக்காட்டினார்.

அடுத்ததாகப் பண்டிதர் ச. ப சர்மா பரீட்சை அறிக்கை வாசித்தார். சம்ஸ்கிருத விஸ்வ பரிஷத்தின் புத்தூர்க் கேந்திரம் நடாத்திய பம்பாய் - பாரதீய பவனத்தின் சம்ஸ்கிருத பரீட்சைகளிலும் சென்னை - அமர பாரதீ பரீட்சா சமிதியின் பரீட்சைகளிலும் தேறியவர்களுக்குத் தகுதிப் பத்திரங்களும் உயர் சுர சித்திபெற்ற 22 பேருக்குப் பரிசுகளும் கொடுக்கப்பெற்றன பரிசு வழங்கிப் பேசிய உதவி வித்தியாதிபதி திரு. எஸ் யு. சோமசேகரம் ஒருவன் தன் மொழியிற் புலமையடைவதற்குக்கூட இன்னுமொரு மொழியையாவது கற்பது அவசியமென்றும் தென்னிலங்கையிலுள்ளோர் பல மொழிகளையும் படித்து முன்னேற நம்மவர் இத்துறையிற் பின்னிற்பது வருந்தத்தக்கது என்றும், தமிழறிவுக்கும் இந்துசமய அறிவுக்கும் சம்ஸ்கிருதப் பயிற்சி பெருந்துணையாகும் என்றும், சில பள்ளிக்கூடங்களுக்குச் சம்ஸ்கிருதம் படித்த ஆசிரியர்களை நாம் அனுப்பியும் சம்ஸ்கிருதபாடம் அவ்விடங்களிற் படிப்பிக்கப்படவில்லை என்றும் குறிப்பிட்டார்.

சென்னை அமரபாரதீ பரீட்சாசமிதிக்கு இலங்கையில் ஒரு கிளை நிறுவுவதற்கான ஆயத்தங்களைச் செய்வதற்குத் திரு. ஆர். பாலசுப்பிரமணியம், திரு. எஸ். ஆர். குமரேசன், பண்டிதர் ச. ப. சர்மா ஆகியோரைக்கொண்ட உபசபை ஒன்று தெரிவு செய்யப்பட்டது. இலங்கையிலுள்ள பிரபல ஆங்கிலச் செய்தித்தாள்கள் தமிழ்ப் பகுதிகளில் நடைபெறும் அரசியற்கலப்பற்ற கல்வி கலாசார சம்பந்தமான செய்திகளுக்குப் போதிய இடம் கொடுக்கவேண்டுமென்ற தீர்மானமும் நிறைவேற்றப் பெற்றது. திரு கு பாலசுந்தரக்குருக்கள் (செயலாளர்) நன்றியுரைகூறினார்.

---

### கோட்டு விற்பனவு விளம்பரம்

சுளிபுரம் கிழக்கு சுளிபுரம்
(1) ஆறுமுகம் செல்லையாவும்
(2) பெண் செல்லம்மாவும்
வழக்காளிகள்
இல. M B 4633
எதிராக
சுளிபுரம் கிழக்கு சுளிபுரம்
சின்னப்பு கைம்பெண்
மீனாஷிப்பிள்ளை
-எதிராளி,

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B. 4633 ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் இரு துண்டுக் காணி 1963 ஞூ வைகாசி மீ 18 ௳ சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு முதலாம் காணியும் 11 மணிக்கு இரண்டாம் காணியும் அந்தந்தக்காணிக்குள் நின்றுபிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல்வட்டி ரூபா 300/-ம் 17-2-62 தொடக்கம் 8-11-62 வரைக்கும் ரூபாய் 2500-க்கு 8 வீத வட்டியும் அதன் மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை ௫ வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 340-59 உம்.

காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்கு சங்கானை கோயிற்பற்று சுளிபுரம் இலை "இயமன்கலட்டி" பர நில இலா மூன்றும் $9\frac{3}{4}$ குளியும் (பரநிலா 3 — $9\frac{3}{4}$ குளியும்) கிணறும் செய்பயிர்வான்பயிர்களும் எல்லை கிழக்கு நடராசா கைம்பெண் தங்கமுத்துவினுதனம், வடக்கு அம்பலவாணர்சுப்பையாவினதும் பெண்முத்துப்பிள்ளையதுமாதனம் இதடங்கலில் வடக்கெல்லையிலிருக்கும் ஆதன உரிமைக்காரரின் கிணற்றுப்பங்கும்வழிவாய்க்கால் உரிமைகளும் புறநீங்கலாக.

(2) ஷெ யிறை "புலிகுத்திர காடு" பர நில இலா மூன்று மட்டும் கிணறும் பனைமரங்களும் எல்லை கிழக்கு சின்னத்தம்பி ஆசைப்பிள்ளையினுதனத் தினுரிமையாளருக்கு மூரிய வாதனம். வடக்கு பொன்னம்பலம் பெண் பொற்கொடியினுதனம். மேற்கு நாகமுத்துவின் கைம்பெண் தெய்வானைப்பிள்ளையினுதனம். தெற்கு முருகேசு பெண் சின்னத்தங்கத்தினுதனம். இதடங்கலில் மேற்கெல்லையிலிருக்கும் ஆதன உரிமைக்காரரின் கிணற்றுப் பங்கு வழிவாய்க்கால் உரிமைகளும் புறநீங்கலாக.

செ. விசாகரெத்தினம்,
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்-
133 பருத்தித்துறை றோட்டு,
நல்லூர், யாழ்ப்பாணம்.
16-4-63.
M 10 19-4-63.

---

### அணிந்துரை அரங்கம்

சோபகிருது வருட
திருக்கணித பஞ்சாங்கம்

விலை: ரு. 1-50

யாழ்ப்பாணம் மட்டுவில் சிவஸ்ரீ சி. சுப்பிரமணிய ஐயர் (J. R A. S.) அவர்கள் கணித்து வெளியிட்டுள்ள மேற்படி பஞ்சாங்கம் வழமைபோல அத்தியாவசிய அம்சங்களை உள்ளடக்கியதாயும், அழகிய அச்சு அமைப்புக் கொண்டதாயும் விளங்குகிறது.

ஆனால் வாக்கிய பஞ்சாங்கத்துக்கும்இந்த(திருக்கணித) பஞ்சாங்கத்திற்கும் நவராத்திரி, தீபாவளி தினங்கள் கணித்ததில் வேறுபாடு ஏற்பட்டுள்ளது.

இந்த (திருக்கணித) பஞ்சாங்கம் இந்தியாவில் வெளியாகியுள்ள 50 பஞ்சாங்கங்களையும், இந்திய அரசாங்கப், 12 மொழிகளில் வெளியிட்டுள்ள பஞ்சாங்கத்தினையும் பின்பற்றி புரட்டாதி 2-இல் நவராத்திரியையும் 30 திகதி தீபாவளியையும் கொண்டாடும்படி கூறுகிறது.

இப்பஞ்சாங்கம்கிடைக்கும் இடம்;
சி. சுப்பிரமணிய ஐயர்,
தில்லைவாசம், மட்டுவில்,
சாவகச்சேரி.
புத்தகசாலைகளிலும் கிடைக்கும்.

---

## உண்மை விளக்கம்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

வுடைய ஸ்ரீ பஞ்சாக்கரத்தையே திருமேனியாகக்கொண்டு, எட்டும் இரண்டும் உரு ஆன இலிங்கத்தே அவாயம் அற நின்று ஆடுவான் - அகரம் உகரம் இரண்டும் உருவமாயிருக்கின்ற யகரமாகிய ஆன்மாவிடத்திலே (அவ்வான்மாவினது) பிறவித்துன்பம் நீங்கும்படி நின்று நிருத்தஞ் செய்தருளுவான்.

எட்டு - 'அ என்னும் எழுத்தையும், இரண்டு - 'உ' என்னும் எழுத்தையும் உணர்த்தி நின்ற குறிப்பு மொழிகளாம்.

பொழிப்பு: சிவபெருமான் ஸ்ரீ பஞ்சாக்கரத்தைத் திருமேனியாகக்கொண்டு யகரமாகிய ஆன்மாவிடத்திலே (அவ்வான்மாவினது) பிறவியொழியும்படி திருநடனஞ் செய்தருளுவான்.

இதுவுமது

(பஞ்சாக்கரத்திருமேனி)

ஆடும் படிகேள்நல் லம்பலத்தான் ஐயனே
நாடும் திருவடியி லேநகரம் — கூடும்
மகரம் உதரம் வளர்தோள் சிகரம்
பகருமுகம் வாமுடியப் பார். 32.

கொ—கூ: ஐயனே, நல் அம்பலத்தான் ஆடும்படி கேள்; நாடும் திரு அடியிலே நகரம் (ஆகவும்) கூடும் உதரம் மகரம் (ஆகவும்) வளர்தோள் சிகரம் (ஆகவும்) பகரும முகம் வா (ஆகவும்) முடி'ய' (ஆகவும் கொண்டு அவன் நிருத்தஞ் செய்வான் எனபதை விசாரித்துப்) பார்.

ப—ரை: ஐயனே - மாணாக்கனே, நல் அம்பலத்தான் ஆடும்படி கேள் - நல்ல கனகசபையிலே எழுந்தருளியிருக்கின்ற சிவபெருமான் திருநடனம் செய்தருளுகின்ற முறையைச் சொல்லுகிறேம் கேட்பாயாக; நாடும் திரு அடியிலே நகரம் - நாடா நின்ற திருவடியிலே நகரமாகவும், கூடும் உதரம் மகரம் - பொருந்திய திருவுந்தியிலே மகரமாகவும், வளர் தோள் சிகரம் - வளரா நின்ற திருத்தோளிலே சிகரமாகவும், பகரும் முகம் வா - சொல்லப்பட்ட திருமுகத்திலே வகாரமாகவும், முடி'ய' - திருமுடியிலே யகரமாகவும் (கொண்டு அவன் திருநடனம் செய்தருளுவான் என்பதைப்) பார் - (நீ) விசாரித்து அறிந்துகொள்வாயாக

இதனால் லயாங்கமெனக் கூறப்படும் நகாராதி பஞ்சாக்கர அமைப்பும் திருநடனமும் உரைக்கப்பட்டன.

பொழிப்பு: கனகசபையில் எழுந்தருளிய இறைவன், திருவடியிலே நகரமும் திருவுந்தியிலே மகரமும் திருத்தோளிலே சிகரமும், திருமுகத்திலே வகாரமும், திருமுடியிலே யகாரமும் பொருந்த (நின்ற திருமேனிகொண்டு) திருநடனஞ் செய்தருளுவான்.

இதுவுமது

(பஞ்சாக்கரத் திருநடனம்)

சேர்க்குந் துடிசிகரஞ் சிக்கனவா வீசுகரம்
ஆர்க்கும் யகரம் அபயகரம் — பார்க்கிலிறைக்(கு)
அங்கி நகரம் அடிக்கீழ் முயலகனார்
தங்கும் மகரமது தான். 33.

கொ—கூ: பார்க்கில், இறைக்கு, ஆர்க்கும் துடி சேர்க்கும் (கரம்) சிகரம் (ஆகவும்), சிக்கன வீசுகரம் வா (ஆகவும்), அபயகரம் யகரம் (ஆகவும்), அங்கி நகரம் (ஆகவும்), முயலகனார் தங்கும் அடிக்கீழ் மகரம் அது (ஆகவும் பொருந்த அவ்விறைவன் திருநடனம் செய்தருளுவன் என அறிவாயாக.)

ப—ரை: பார்க்கில் - ஆராய்ந்து பார்க்குமிடத்து, இறைக்கு - சிவபெருமானுக்கு, ஆர்க்கும் துடி சேர்க்கும் (கரம்) சிகரம் - ஒலிக்கின்ற டமருகம் ஏந்திய திருக்கரத்திலே சிகாரமாகவும், சிக்கன வீசு கரம் வா - நன்றாக வீசிய திருக்கரத்திலே வகாரமாகவும், அபயகரம் யகரம் - அஞ்சல் என அமைத்த திருக்கரத்திலே யகரமாகவும், அங்கி நகரம் - அக்கினி ஏந்திய திருக்கரத்திலே நகாரமாகவும், முயலகனார் தங்கும் அடிக்கீழ் மகரம் அது (தான்)-முயலகனார் பொருந்தியிருக்கும் (மிதித்த) திருவடியிலே மகாரமாகவும் பொருந்த அவ்விறைவன் திருநடனம் செய்தருளுவன் என அறிவாயாக.

(தொடர்ச்சி 4ம் பக்கம்)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாசகம் முழங்கும் தாய்லந்து மாளிகை

பரமசிவனையும் உமாதேவியாரையும் மணவாளக்கோலத்தில் சிவனேயர் வழிபட்டு வேண்டியன வேண்டும் இந்தப் புண்ணிய தினமாகிய பங்குனி உத்தரத்தில், மலைநாட்டிலே பிரசித்தி பெற்ற இந்தக் குயில்வத்தைச் சிவாலயத்தில் பெருந் திருவிழா; போற்றப்பெறவேண்டிய திருமணங்கூட நடக்கின்றது. திருமணம் அகில இலங்கைச் சைவப்புலவர் பட்டதாரிகள் சங்கத்திற்கும், ரேசல்லையைச் சேர்ந்த குயில்வத்தைச் சிவாலய ஆத்மயோக ஞான சபையார்க்குமாகும்.

இவ்வாறு அட்டன் பகுதியிலே குயில்வத்தைச் சிவாலயத்தில் ஆத்மயோக ஞான சபையாரால் ஒழுங்கு செய்யப்பட்ட சமயப் பிரசாரக் கூட்டத்தில் அகில இலங்கைச் சைவப்புலவர் பட்டதாரிகள் சங்கம் பங்குபற்றிப் பேருரைகள் வழங்கியபோது, இக்கூட்டத்திற்குத் தலைமை தாங்கிய திரு. அ. சபாபதிப்பிள்ளை ரேசல்லை புகையிரத நிலைய அதிபர் வாழ்த்தினார்.

ஆயிரம் ஆயிரம ஆண்டுகளுக்கு முன்னரே பெரும் சமுத்திரங்களையெல்லாம் தமிழர் தம் பெருந் தெருக்களாக அமைத்து வியாபாரம் செய்தது மாத்திரமல்லாமல் சென்ற இடங்களெல்லாம் தம் கலையையும் கலாச்சாரத்தையும் பரப்பினர். இன்றும் தாய்லந்து அரண்மனையில் திருவாசகம் ஓதி வருகிறார்கள். இதுவே போதிய சான்று. இதேபோல் நீங்களும் இங்கு வந்து காடுமேடாகக்கிடந்த மலைநாட்டை செல்வம் கொழிக்கும் நாடாக்கினீர்கள். அத்தோடு சமயப் பண்பாடுகளையும் பாதுகாத்து வருகின்றீர்கள். இங்கு விளங்கும இந்தச் சிவன்கோவிலும் நீங்கள் பக்தி சிரத்தையுடன் நடாத்தும் திருவிழாக்களும் போதியசான்று.

ஆத்மஜோதி ஆசிரியர் திரு. நா. முத்தையா வரவேற்புரை கூறினார்.

திரு, க. சபா. ஆனந்தர் (பி. ஏ., பி. ஓ எல்.) சைவப் புலவர் திரு வ. செல்லையா, பண்டிதர் திரு. வே. சங்கரப்பிள்ளை, சைவப் புலவர் சித்தாந்த பண்டிதர் திரு. இ. செல்லத்துரை, சைவப்புலவர் வித்துவான் திரு ச. சச்சிதானந்தம் ஆகியோர் பேருரை வழங்கினர்.

சைவப்புலவர் பண்டிதர் திரு இ. திருநாவுக்கரசு சங்கீத கதாப்பிரசங்கம்செய்தார் திரு. மு. வர்ணகுலசிங்கம் திருமுறை ஓதினார்.

பக்தர்கள் தீக்குளிப்பு, காவடி ஆட்டம, கரகவிளையாட்டு ஆதியனவும் இடம் பெற்றன.

## சர்வோதய இயக்கம்

உருத்திரபுரம் அரசினர் மகாவித்தியாலய வீதியைச் சர்வோதய சிரமதான இயக்கத்தின்மூலம் அமைக்கும் பணிகள் இந்த மாதம் 19-ம், 20-ம், 21-ம் திகதிகளில் நடைபெறும்.

19-4-63 காலை 9 மணிக்கு கிளிநொச்சித் தொகுதிப் பாராளுமன்றப் பிரதிநிதி திரு அ. சிவசுந்தரம் அவர்களும், யாழ்ப்பாணமாவட்ட அரசாங்க அதிபர் திரு. வி. பி. வித்தாச்சி, ஸி ஸி. எஸ். அவர்களும் சர்வோதய சிரமதான இயக்கப்பணிகளை ஆரம்பித்து வைப்பார்கள. நாள்தோறும் இரவு 9மணிக்குக் கலை நிகழ்ச்சிகள் உண்டு.

21-4-63ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிககு உருத்திரபுரம் அரசினர் மகாவித்தியாலயத்தில் பகிரங்கக் கூட்டம் நடைபெறும்.

### கோட்டு விற்பனவு விளம்பரம்

மாவிட்டபுரம்
சின்னையா கைம்பெண்
சேதுப்பிள்ளை —வழக்காளி
இல. M. B. 3905
எதிராக
மாவிட்டபுரம்
(1) காசிப்பிள்ளை
கிட்டிணரும் பெண்
(2) சின்னாச்சியும்
—எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிககோட்டின் M. B. 3905-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை, 1963 ஸ்ரீ வைகாசிமீ 4-ம் உ சனிககிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல்வட்டி ரூபாய் 3730/- வும் 19-2-61 தொடக்கம் 10 11-61 வரைக்கும் ரூபாய் 2500/ க்கு 9 வீதவட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 241—11 சதமும் இச் செலவில் ரூபா 125/- உம் முதல் வட்டி ரூபாயில் 1000/- மும் கொடுபட்டிருக்கிறது.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி தெல்லிப்பளை கோயிற்பற்று மாவிட்டபுரம் இறை "எத்தறப்பை" பரப்பு நில இலா 11-ம் இணறும், வீடுகளும், வடலிகளும். எல்லை கிழககு ஒழுங்கை, வடக்கு ரேட்டு, மேற்கு வேலர் கதிர்காமுவுக்கும் செல்லப்பா நரசிங்கத்துக்கும் பங்காளருக்கும் உரிய ஆதனம், தெற்கு தங்கச்சிப்பிள்ளையின் உருமைக்காறருக்குரிய ஆதனம் இதில் சொரியலாய் அரைவாசியும் அதைச் சேர்ந்தவைகளும் எதிரியினால் கிழக்குப் பக்கத்தல் கட்டப்பட்ட கல்வீடும் இதடங்கலும்.

அ. ஜெகநாதன்,
கொம்மிஷனர் & விலைமதிப்பாளர்.
16 A, அம்மன் ரோட்
கந்தர்மடம் யாழ்ப்பாணம்.
M 12 19-4-63.

## உண்மை விளக்கம்

[ 3 ம் பக்கத் தொடர்ச்சி ]

இதனால் போகாங்கமென்னும் சிகாராதி பஞ்சாக்கர அமைப்புந் திருநடனமும் உரைக்கப்பட்டன.

பொழிப்பு: இறைவன் டமருகமேந்திய திருக்கையில் சிகரமும், வீசியதிருக்கையில் வகாரமும், அபயகரத்தில் யகரமும், அக்கினியேந்திய திருக்கையில் நகரமும் ஊன்றிய திருவடியில் மகாரமும் பொருந்த(ப் பஞ்சகிருததிய) திருநடனம் செய்தருளுவான்.

—தொடரும்.

## இவ்வாரம் 21-4-63 — 27-4-63

# உங்கள் பலன் ?

[ ஸ்ரீ இராதாகிருஷ்ணன் கணிப்பது ]

மேடராசி அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

உடல் நிலைக் கோளாறும் இனத்தவருடன் மோதலும் உண்டாம். செலவுகள் பெருகும் உமது காரியங்களில் கவனமாக நடந்து கொள்க. அயலவரும் அன்னியரும் மிக உதவுவர்,

இடபராசி கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்,

நிலபுலன்களால் இலாபம் நிச்சயம். பழைய முதலீடுகள் நற்பலன் தரும் நண்பர்களும் அயலவரும் உதவுவர்.

மிதுனராசி மிருகசீரிடம், 2 3, 4, திருவாதிரை, புனர்பூசம் 1ம், 2ம் பாதம்.

வழமையிலும் வேலை அதிகமாக விருக்கும். ஆனால் போதியளவு ஈடுசெய்யப் படுவீர். வேலை வழமையில் மாற்றம் உண்டாம், தடைகளைத் தாண்டிவிட உம்மால் முடியும்.

கடகராசி புனர்பூசம் 4ம் பாதம், பூசம் ஆயிலியம்.

தொடர்ந்து உடல்நிலை, குடும்ப விவகாரங்கள் திருப்தியற்றிருக்கும். ஆனால் தொழில் ஈடுபாடுகள் வெற்றிபெறும். புகழும் சமூக வெற்றியும் உண்டாம்.

சிங்கராசி மகம், பூரம். உத்தரம் 1-ம் பாதம்.

ஞாயிறு, திங்கள், செவ்வாய் காலை எச்சரிக்கையோடு கழிய வேண்டும் மிகுதி நாட்கள் ஓரளவு நல்லவை, ஆனால் மன நிம்மதி இருக்காது.

கன்னிராசி உத்தரம் 2, 3, 4 பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

புதுமுயற்சிகளுக்கு ஞாயிறும், திங்களும் சாதகமான நாட்கள். செவ்வாய் மாலை, புதன், வியாழன் எச்சரிக்கையோடு கழிய வேண்டும் மிகுதி நாட்கள் சாதகமானவையாய் மாறும்.

துலாம், சித்திரை 3 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம.

குடும்பநிலை அவ்வளவு திருப்தியாயிருககாது உமது எண்ணப்படி நடந்து கொள்வது கடினமாயிருக்கக் காண்பீர் வியாழன் மாலை, வெள்ளி, சனிகாலை எச்சரிக்கையோடு கழிய வேண்டும்.

விருட்சிகராசி விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.

நல்லவாரம். தடைகளை யெல்லாம் தாண்டி உமது விருப்பம் போல் நடந்துகொள்ள முடியும். எதிரிகளுக்கு இன்னலும், உமக்குப் புகழும் நிச்சயம். சனிமாலையை எச்சரிக்கையோடு தழிக்கவும்.

தனுராசி மூலம், பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

வெற்றிக்காகக் கடுமையாக உழைகவேண்டி இருக்கும். தம்பி தங்கையர் மிக உதவுவர். சிறு உடல்நிலைக் குழப்பங்களுக்கு இடமுண்டு.

மகாராசி உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்,

குடும்பநிலை தொடர்ந்து குழம்பலாக இருக்கும். உடல்நிலையும் திருப்தியா யிருக்காது. தூற்றித் திரிவோர் பற்றி எச்சரிக்கை. பணமளவில் ஓரளவு நல்லவாரம்.

கும்பராசி அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,

திரும்பவும் நல்லவாரம். அதிக சிரமமின்றி உமது முயற்சிகளில் வெற்றி பெறுவீர். புகழும் சமூக வெற்றியும் உண்டாம்.

மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.

மேலும் சிலநாட்களுக்கு உடல் நிலை திருப்தியாயிருக்காது. பணமளவில் நல்லவாரம். கல்வி ஈடுபாடுகளில் வெற்றி நிச்சயம்.

### கோட்டு விற்பனவு விளம்பரம்

வண்ணார்பண்ணை கிழக்கு, யாழ்ப்பாணம்
1 வள்ளியம்மை அருளம்பலம் தனது புருஷனுதவியுடன்
2 அம்பலவாணன அருளம்பலம் —வழக்காளிகள்
இல. M. B. 7824
எதிராக
நல்லூர் யாழ்ப்பாணம்
தற்பொழுது இலக்கங்கள் 31/ ; 1/1 கெளென்பர் பிளேஸ், (Glenber Place) கொழும்பு
1 சிதம்பலம் சுப்பிரமணியம் எதிராளி

கொழும்பு டிஸ்திறிக் கோட்டின் M. B 7824-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைதத கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிககப்படும் ஒரு துண்டுக்காணியை 1963-ம் ஸ்ரீ ஆனி மீ 1 உ சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபாய் 11875-ம், 27-7-61தொடக்கம் 19-2-62 வரைக்கும் 9 வீத வட்டியும் அதன்பின் முழுததொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 420 87 சதமும்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் நல்லூர்க் கோயிற்பற்று நல்லூர்இறை 'குளைக் காட்டு குளி உலகன் வளவு" பர. நில. இலா. 8-ம், இலக்கம் D 61/353-ன் கீழ் பதிவு செய்யப்பட்டதும், பர, நில. இலா. 1-ம் இலக்கம் D 69/248-ன் கீழ் பதிவு செய்யப்பட்டதும். பர. நில. இலா. 4-ம் இலக்கம் D 57/39 ன் கீழ் பதிவு செய்யப்பட்டதும் இவை யாவும் கூடி ஒரு துண்டுக் காணியாக வழங்கப்படும். பர. நில. இலா (11) பதினொன்றாக அமைந்துள்ளது. இதடங்கலும். எல்லை கிழக்கு திலலையம்பலம் பெண் இராசம்மாவுக்கும், சபாரெத்தினம் கைம்பெண் சிவஞானத்துக்கும், குமாரசாமி கைம்பெண் செல்லம்மாவுக்கும் உரிய ஆதனங்கள். வடககு கந்தையா பெண் செல்லத்தின் ஆதனம் மேற்கு என். கனகசபையின் உரிமைக்காரருடையதும், எஸ் சரவணமுத்துவின் ஆதனமும். தெற்கு, ரேட்டும் கெ சண்முகத்துக்கும் உரிய ஆதனம்.

அ. ஜெகநாதன்
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
16A, அம்மன் ரேட்
கந்தர்மடம், யாழ்ப்பாணம்,
M 11 19-4

### கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் கொட்டடி
நாகலிங்கம் கைம்பெண் விசாலாட்சி வழக்காளி
இல M B 3634
எதிராக
தெல்லிப்பழை கிழக்கு
1 நாகநாதி சிதம்பரப்பிள்ளையும் பெண்
2 பொன்னம்மாவும்
— எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறி கோட்டின் M. B. 3634-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக காணியை 1963-ம் ஸ்ரீ வைகாசி மீ 4 உ சனிககிழமை முற்பகல் 10 மணி தொடககம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைததொகை:- முதல்வட்டி ரூபாய் 3500 ம் 22 9-60 தொடககம் 15-2-61 வரைககும் ரூபாய் 3000 க்கு 10 வீத வட்டியும்

## சத்தியாக்கிரக நினைவுநாட் கூட்டம்

17-4 63 புதன்கிழமை, யாழ்ப்பாணம் கோட்டை மைதானத்தில் மாலை 6 மணியளவில் திரு, சி. மூ. இராசமாணிக்கம், பா. உ., தலைமையில் நடைபெற்றது.

பிரதம பேச்சாளராக திருவாளர்கள் ஏ. அமிர்தலிங்கம், சி. இராசதுரை, வி ஏ. கந்தையா டாகடர் நாகநாதன், எஸ்.யே.வி செல்வநாயகம் ஆகியோரும் பேசினார்கள்.

## அணிந்துரை அரங்கம்

சோபகிருது வருட
வாக்கிய பஞ்சாங்கம்

யாழ்—கொக்குவில், ஸ்ரீ. சி, இரகுநாதையரால் கணிக்கப்பெற்று சோதிடப்பிரகாச அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பெற்றுள்ள வாக்கியபஞ்சாங்கம் வழமையான சிறப்புடன், அழகான அமைப்புடன் வெளியாகி உள்ளது.

நவராததிரி, தீபாவளி தினங்கள் கணிப்பதில் திருக்கணித பஞ்சாங்கத்திற்கு முரணாக, நவராத்திரி ஆரம்பத்தை ஐப்பசி 1-ம் திகதி என்றும், தீபாவளியை ஐப்பசி 29-ம் திகதி என்றும் குறிக்கப்பட்டுள்ளது.

பஞ்சாங்கம் கிடைக்கும் இடம்:
சோதிட விலாஸ் புத்தகசாலை,
யாழ்ப்பாணம்.
நாட்டிலுள்ள ஏனைய விற்பனவு நிலையங்கள்,
விலை ரூபா: 1-50,

நுண் தொழில் இளைஞன்

வெளியீடு:
மாணவர்மன்றம் யாழ் - கனிட்ட தொழில்நுட்பக்கல்லூரி
கொக்குவில்,

பண்டிதர், கா, போ. இரத்தினம் அவர்களின் தமிழ் உணர்ச்சி என்னும் கட்டுரை திரு. வ. பொன்னம்பலத்தின் 'பெரும் படைவேண்டும்' என்னும் கட்டுரை கல்லூரி மாணவரிடையே நடாத்தப்பெற்ற கட்டுரைப்போட்டியில் பரிசுபெற்ற கட்டுரைகள் இன்னும் ஸ்ரீ. சிவசுப்பிரமணியசர்மாவின் ஈழத்தின் பொருளாதார வளர்ச்சிபற்றிய கட்டுரை முதலியனவும், கவிதைகளும் உள்ளடங்கிய இச்சஞ்சிகை இலவச வெளியீடாகும.

அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 249.95 சதமும்,

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக வலிகாமம் வடக்குப் பகுதி தெல்லிப்பளை கோயிற்பற்று தெல்லிப்பழை கிழக்கு இறை 'கிளானை" பரநில இலா 10 ம் இதில் மேற்குப் பக்கமாக விற்கப்பட்ட பரநில இலா 3 ஐத் தவிர்த்து பர நில இலா 7-ம். இதற்கு எல்லை கிழககும், வடக்கும், தெற்கும் ஒழுங்கை. மேற்கு இதில் மிஞ்சிய மிகுதிக்காணி. இவ்வாதனம் யாழ்ப்பாணம் காணிப்பதிவுகந்தோரில் H 321/99 ம் இலக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அ ஜெகநாதன்,
கொமிஷனர் & விலைமதிப்பாளர்,
16 A. அம்மன் ரேட்
கந்தர்மடம் யாழ்ப்பாணம்.
M. 13 19-4-63.

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறை வீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் பிறவுண் வீதி, 2ம் ஒழுங்கை, 2ம் இலக்கத்தில் [illegible] சின்னத்துரை அவர்களால் 19-4-1963 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.
ஆசிரியர், நம. சிவப்பிரகாசம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org